# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 43 — 1973 ජනවාරි 19 වැනි සිකුරාදා — 1973 01.19

43 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

( ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன )


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 41 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | .. 53 |


## பதவிகள் — வெற்றிடம்

*"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக் குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"*

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(iii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப் பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவரென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/ உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/ சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

---

**முக்கிய அறிவித்தல்**

*ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். “இலங்கையர்” என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் மூன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை. விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (“ஆ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதாவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### அரசாங்க நிருவாகத் திணைக்களம்

### பிரசுர உத்தியோகத்தரும் நூலகரும்—நிருவாகக் கல்விக் கழகம்

அரசாங்க நிருவாகத் திணைக்களத்தின் நிருவாகக் கல்விக் கழகத்தில் பிரசுர உத்தியோகத்தரும் நூலகருக்குமுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்டு 1973 பெப்ருவரி 20 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7 என்ற விலாசமிடப்பட்டுப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். வேறு விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் “பிரசுர உத்தியோகத்தரும் நூலகருக்குமுரிய பதவி” என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2. வேதனத் திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—360×12—480×7—ரூபா 14,400 ஆகும். 1969.10.01 ஆம் தேதிக்கு முன்பிருந்த நேரொத்த வேதனத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,080—360—480—ரூபா 11,280 ஆகும். ரூபா 7,800 க்கு முன்பும் ரூபா 11,520 க்கு முன்பும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையுண்டு. திரட்டிய வேதனம் ரூபா 11,520 ஐ வினைத்திறமைகாண் பரீட்சை மூலமடையுமுன் இலங்கை நூலக அவையின் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

3. பணிக்கமர்த்தும் நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானதாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவியொன்றை ஏலவே வகிக்காவிடின், அரசாங்க சேவைச் சகாய நிதியத்திற்கு உதவுதொகை வழங்குநராகவிருப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத் தேதியன்று அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவியொன்றை வகிப்பாராயின் அவர்/அவள் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையையுடையவராகத் தொடர்ந்திருப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஏலவே அரசாங்க சேவையில் இல்லாவிடின் முதலில் மூன்றுண்டுக் காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரமான, ஓய்வூதியத்திற்குரித்துடைய உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்படின் அவர்/அவளின் நியமனம் ஓராண்டு காலத்திற்குப் பதில் கடமையாற்றும் தன்மையானதாக விருக்கும்.

4. தேவைப்படும் தகைமைகள்.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம்—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பொருளாதாரம், சமூக விஞ்ஞான பாடங்களில் சமூகவியல் அல்லது பொது நிருவாகம் ஆகிய ஒரு பாடத்தையுடைய பட்டதாரியென்றும்,

(ஆ) இலங்கை நூலக அவையின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார் அல்லது களிட்ட பல்கலைக் கழகமொன்றின் நூலக அறிவியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் (டிப்புளோமா) அல்லது அதற்குச் சமமான தகைமையுடையவரென்றும் ;

(இ) சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் போதுமான அறிவுடையவரென்றும் ;

(ஈ) பெப்ருவரி 1 ஆந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவரென்றும் 35 வயதுக்கு மேற்படாதவரென்றும் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும். (ஏலவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு மேற்போந்த வயதெல்லை ஏற்புடையதாகாது).

5. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும்:

(அ) மேற்போந்த பந்தி 4(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணிப் பட்டச் சான்றிதழ் ;

(ஆ) பந்தி 4(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்றுறைத் தகைமைகள் பற்றிய சான்றிதழ்/சான்றிதழ்கள் ;

(இ) பிறப்பு பதிவுச் சான்றிதழ் (கவனிக்க: சமயதீட்சைச் சான்றிதழோ உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிச் சட்டக் கோவையின் தேவையின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஈ) அவர்/அவள் பிரசுரத்திலும் நூலகத்திலும் அனுபவமுடையர் என்பதற்குரிய ஏதாவதொரு சான்றிதழ் ;

(உ) அவர்/அவளின் குணம் பற்றிய, அண்மையில் பெற்ற இரு நற்குணச் சான்றிதழ்கள்.

குறிப்பு.—இச்சான்றிதழ்களின் பிரதிகள் அபேட்சகர்களுக்குத் திருப்பியனுப்பப்படமாட்டா. இச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்படுதலாகாது.

6. இச்செய்தி மடலின் பகுதி I பிரிவு(IIஅ) இல் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள "அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகள்" ஐக் கவனமாகப் பார்க்குமாறு விண்ணப்பஞ் செய்யவுள்ள விண்ணப்பகாரர்கள் வேண்டப்படுகின்றனர்.

பி. மகாதேவா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 02,01.1973.

**விண்ணப்பப் படிவம்**

**முகாமைச் சேவைகள் உத்தியோகத்தர் பதவிகள்**
**நிருவாகக் கல்விக் கழகம், அரசாங்க நிருவாகத் திணைக்களம்**

1. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
2. தற்போதைய பதவியும் வேதனமும் (வேதன நிலையையும் வேதனத்திட்டத்தையும் குறிப்பிடுக) :.
3. தற்போது சேவையாற்றுந் திணைக்களமும் அஞ்சல் முகவரியும் :————.
4. 1973, பெப்ருவரி 01 ஆந் தேதியன்றுள்ள வயதும் சேவைக் காலமும் :————.
5. மிக உயர்ந்த கல்வித் தகைமை :————.
6. தொழிற்றுறை அல்லது தொழினுட்பத் தகைமைகள் ஏது மிருப்பின், அவற்றின் விவரங்கள் :————.
7. முகாமைச் சேவைகள் துறையில் அல்லது அதனையொத்த துறையில் ஏதேனும் சிறப்புப் பயிற்சியோ அனுபவமோ விருப்பின், அவை பற்றிய விவரங்கள் :————.

மேற்போந்த விவரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

அனுப்பப்படுகின்றது. இவ் விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்பட்டால், முகாமைச் சேவைகள் உத்தியோகத்தராகத் தற்காலிகச் சேவை மாற்றமளிக்கப்படுவதற்காக அவர் ஒரு மாத காலத்துக்குள் விடுவிக்கப்படுவார்.

————,
திணைக்களத் தலைவர்.

தேதி :————.

1-662—19,01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

**மட்டக்களப்பு மாவட்டத்தின் கமுனுபுர பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் ஏறாவூர் கோறளைப் பற்று பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு கமுனுபுர பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பக்காரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக் காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சன சமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973.02.19 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ந் திகதி.

1-566—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மகிழவட்டவான் பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் மண்முனைப்பற்று வடக்குப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு மகிழவட்டவான் பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பக்காரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பக்காரர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக் காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சன சமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973.02.19 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ந் திகதி.

1-565—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

**மட்டக்களப்பு மாவட்டத்தின் உன்னிச்சை பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் மண்முனைப்பற்று வடக்கு பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு உன்னிச்சை பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பக்காரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறுது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக் காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973.02.19 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ந் திகதி.

1-564—19.01.72 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

இல.: இஎஸ்/16/73.

**பொறியியற் சேவைச் சபை**

**இலங்கைப் பொறியியல் சேவை 3 ஆம் வகுப்பில் மின்சாரப் பொறியியலாளர்களுக்கான வெற்றுப் பதவிகள்**

இலங்கைப் பொறியியற் சேவை 3 ஆம் வகுப்பு மின்சாரப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொறியியற் சேவைச் சபை அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, அவை பணிப்பாளர், பொறியியற் சேவை சபை, செயலகம், கொழும்பு 1 என்னும் முகவரியை 1973 பெப்பிருவரி மாதம் 24 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும்.

குறிப்பு (1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்பவர் 8" × 4" அளவுக்கு குறையாத முத்திரையிடாத உறையில் தமது சொந்த முகவரியை எழுதி அனுப்புவதுடன் அப்பரீட்சார்த்தி அரசாங்க சேவையிலுள்ளவரோ அன்றோ என்பதையுந் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—**

(1) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரிமையற்றவையுமாகும். அரசாங்கச் சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யுமாறு கேட்கப்படின் அவ்வாறு சேவை செய்தல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் 1972.03.14 ஆந் தேதியின் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியற் சேவைப் பிரமாணக்குறிப்பு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மின்சாரப் பொறியியல் தொகுதிகள் இரண்டினுள் எவற்றிலொன்றுக்கேனும் நியமிக்கப்படுவர். எனினும், முதல் எட்டு ஆண்டுகளில் உத்தியோகத்தர்கள் ஒரு தொகுதியிலிருந்து மற்றொன்றுக்குத் தற்காலிகமாக மாற்றப்படுவதற்கு ஆளாவர்.

(4) **பிற நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—** 1972.03.14 ஆந் தேதியின் 15,000/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் விதித்துள்ளவற்றுக்கேற்றனவாயிருக்கும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.—**

இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு: ஆண்டொன்றுக்கு 8,160 ரூபா—360 இல் 3—9,240 ரூபா /9,960 ரூபா—360 இல் 3—11,040 ரூபா—480 இல் 13—17,280 ரூபா. ஆண்டொன்றுக்கு 9,960 ரூபாவுக்கும் 13,920 ரூபாவுக்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

குறிப்பு.—(1) முழு உயர்தொழில் தகைமையுடைய பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில் 10,320 ரூபா தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா பெறுவதற்கு முன்னர் 1 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றம் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு சோதனையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். இச்சோதனையின் பாடவிதானமும் திட்டமும் பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்படும்.

முழு உயர்தொழில் தகைமையுடன் சேவையிற் சேரும் பரீட்சார்த்தி நியமன நாளிலிருந்து ஈராண்டுக்காலத்துள் இச் சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஆண்டுக்கு 13,920 ரூபாவுக்கு முன்னருள்ள 2 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றத்துக்கான தகைமை பெறுவதற்கு பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்பட்ட முழு உயர் தொழில் தகைமை பெறுமாறு வேண்டப்படுவர்.

(4) அரசாங்க சேவையில் ஏலவேயுள்ளவரான தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவரின் சம்பளம் அரசாங்கத்தாபனக் கோவையின் 7 ஆம் அத்தியாயத்திலுள்ள விதிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

4. **தகைமைகள்.—**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டிய திருத்திகரமான சான்று; அவர்,

(1) சிறந்த நற்குணமும் உடல் நலமும் உடையவர்;

(2) 1973 பெப்பிருவரி மாதம் 24 ஆந் தேதியில் 21 வயதிற் குட்படாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் உள்ளவர்; (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது);

(3) (அ) இலண்டன் மின்சாரப் பொறியியல் நிறுவகத்தின் அல்லது எலொற்ரோனிக்ஸ், வானொலி பொறியியலாளர் நிறுவனத்தின் கூட்டு உறுப்பினர் அல்லது உறுப்பினர் தகைமை பெற்றுள்ளார்; அல்லது

(ஆ) இலங்கைப் பல்கலைக்கழகத்து மின்சாரப் பொறியியலாளர் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் எவற்றிலிருந்தும் சமமதிப்புள்ள பட்டம்; அல்லது

(இ) (இலண்டன்) மின்சாரப் பொறியியலாளர் நிறுவனத்தின் பரீட்சையில் 1, 2, 3 ஆம் பகுதிகளில், அல்லது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் மின்சாரப் பொறியியலாளருக்கான பரீட்சையில் 1, 2, 3 ஆம் பகுதிகளில் அல்லது அதற்குச் சமமான வற்றில் சித்தியடைந்துள்ளார்; அல்லது

(ஈ) மின்சாரப் பொறியியலாளர் (இலண்டன்) நிறுவனத்தின் அல்லது எலொற்ரோனிக்ஸ், வானொலி பொறியியலாளர் நிறுவனத்தின் (இலண்டன்) கூட்டு உறுப்பினராயுள்ளார்; அல்லது

(உ) கட்டுப்பெத்தை தொழினுட்பக் கல்லூரியில் மின்சாரப் பொறியியலில் ஐந்தாண்டு டிப்புளோமா பெற்றுள்ளார் அல்லது அதேபோன்ற சமமதிப்புள்ள டிப்புளோமா பெற்றுள்ளார்; அல்லது

(ஊ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் மின்சாரப் பொறியியல் தொகுதியில் கூட்டுறுப்புரிமை (எவ். ஐ. இ. இலங்கை) அல்லது உறுப்புரிமை (எம். ஐ. இ. இலங்கை) பெற்றுள்ளார்;

என்பதாகும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணந் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்;

(ஈ) உயர்தொழில் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தலாகாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை பொறியியற் சேவைச் சபைப் பணிப்பாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் பணிப்பாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறிப்பிடப்பட்டுளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('அ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதனுள் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவித்தலைப் பெறுவிடின் உடனே பொறியியற் சேவைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையவராகார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

பொறியியற் சேவைச் சபை அலுவலகம்,
செயலகம், கொழும்பு 1.
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 8 ந் உ.

1-675—19.01.72 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

இல. இஎஸ் 1/16/73.

## பொறியியற் சேவைச் சபை

### இலங்கைப் பொறியியற் சேவை 3 ஆம் வகுப்பு இயந்திரப் பொறியியலாளர்க்கான வெற்றுப் பதவிகள்

இலங்கைப் பொறியியல் சேவை 3 ஆம் வகுப்பில் இயந்திரப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொறியியற் சேவைச் சபை அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை, செயலகம், கொழும்பு 1 என்னும் முகவரியை, 1973 பெப்பிருவரி மாதம் 24 ஆந் நாளன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும்.

குறிப்பு.—(1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்பவர் 8" × 4" அளவுக்குக் குறையாத முத்திரையிடாத உறையில் தமது சொந்த முகவரியை எழுதி அனுப்புவதுடன் அப்பரீட்சார்த்தி அரசாங்க சேவையிலுள்ளவரோ அன்றோ என்பதையுந் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(1) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரிமையற்றவையுமாகும். அரசாங்கச் சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யுமாறு கேட்கப்படின் அவ்வாறு சேவை செய்தல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் 1972.03.14 ஆந் தேதியில் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்பு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இயந்திரப் பொறியியல் தொகுதிகள் மூன்றுள் எவற்றிலொன்றுக்கேனும் நியமிக்கப்படுவர். எனினும், முதல் எட்டு ஆண்டுகளில் உத்தியோகத்தர்கள் ஒரு தொகுதியிலிருந்து மற்றொன்றுக்குத் தற்காலிகமாக மாற்றப்படுவதற்கு ஆளாவர்.

(4) பிற நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—1972.03.14 ஆந் தேதியின் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் விதித்துள்ளவற்றுக்கேற்றனவாயிருக்கும்.

3. சம்பள அளவுத் திட்டம்.—

இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—ஆண்டொன்றுக்கு 8,160 ரூபா—360 ரூபாவில் 3—9,240 ரூபா/9,960 ரூபா—360 இல் 3—11,040 ரூபா—480 இல் 13—17,280 ரூபா. ஆண்டொன்றுக்கு 9,960 ரூபாவுக்கும் 13,920 ரூபாவுக்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

குறிப்பு.—(1) முழு உயர்தொழில் தகைமையுடைய பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு மேற்கூறிய சம்பள அளவுத்திட்டத்தில் 10,320 ரூபா தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா பெறுவதற்கு முன்னர் 1 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றம் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு சோதனையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். இச் சோதனையின் பாடவிதானமும் திட்டம் பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்படும்.

முழு உயர்தொழில் தகைமையுடன் சேவையிற் சேரும் பரீட்சார்த்தி நியமன நாளிலிருந்து ஈராண்டுக்காலத்துள் இச் சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஆண்டுக்கு 13 920 ரூபாவுக்கு முன்னருள்ள 2 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றத்துக்கான தகைமை பெறுவதற்கு பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்பட்ட முழு உயர்தொழில் தகைமை பெறுமாறு வேண்டப்படுவர்.

(4) அரசாங்க சேவையில் ஏலவேயுள்ளவரான தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவரின் சம்பளம் அரசாங்கத்தாபனக் கோவையின் 7 ஆம் அத்தியாயத்திலுள்ள விதிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

4. தகைமைகள்.—

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டிய திருத்திகரமான சான்று, அவர்,

(1) சிறந்த நற்குணமும் உடல் நலமும் உடையவர்;

(2) 1973 பெப்பிருவரி மாதம் 24 ஆந் தேதியில் 21 வயதிற் குட்படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளவர், (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது);

(3) (அ) இலண்டன் இயந்திரப் பொறியியல் நிறுவனத்தின் கூட்டு உறுப்பினர் அல்லது உறுப்பினர் தகைமை பெற்றுள்ளார்; அல்லது

(ஆ) இலங்கைப் பல்கலைக்கழகத்து இயந்திரப் பொறியியலாளர் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் எவற்றிலிருந்தும் சமமதிப்புள்ள பட்டம்; அல்லது

(இ) (இலண்டன்) இயந்திரப் பொறியியலாளர் நிறுவனத்தின் பரீட்சையில் 1, 2 ஆம் பகுதிகளில், அல்லது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் இயந்திரப் பொறியியலாளருக்கான பரீட்சையில் 1, 2 ஆம் பகுதியில் அல்லது அதற்குப் சமமானவற்றில் சித்தியடைந்துள்ளார்; அல்லது

(ஈ) கட்டுப்பெத்தை தொழினுட்பக் கல்லூரியின் இயந்திரப் பொறியியலாளர்க்கான ஐந்தாண்டு டிப்புளோமா பெற்றுள்ளார் அல்லது அதேபோன்ற சமமதிப்புள்ள டிப்புளோமா பெற்றுள்ளார்; அல்லது

(உ) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இயந்திரப் பொறியியல் தொகுதியில் கூட்டுறுப்புரிமை (என். ஐ. இ. இலங்கை) அல்லது உறுப்புரிமை (எம். ஐ. இ. இலங்கை) பெற்றுள்ளார்.

என்பதாகும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய திட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்;

(ஈ) உயர்தொழில் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தலாகாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை பொறியியற் சேவைச் சபைப் பணிப்பாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் பணிப்பாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறிப்பிடப்பட்டுளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டைய ('அ' எனக் குறிப்பிடப்பட்டுளது) அதனுள் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக்கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவித்தலைப் பெறுவிடின் உடனே பொறியியற் சேவைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

பொறியியற் சேவைச் சபை அலுவலகம்,
செயலகம்,
கொழும்பு 1,
1973, ஜனவரி மாதம் 8 ஆந் தேதி.

1-676—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

### லக்சல, பொது முகாமையாளர் பதவிகள்

#### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் லக்சல, குடிசைக் கைத்தொழில் விற்பனை நிலையத்திற் பொது முகாமையாளர் பதவிகட்கு, ஸ்ரீலங்கா (இலங்கை)க் குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டமைந்த படிவங்களிலான விண்ணப்பங்கள், அஞ்சல் அலுவலகப் பெட்டி இல. 570, கொழும்பு 2, எனும் முகவரியைக் கொண்ட கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளரை, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் தேதியன்றோ. அதன்முன்போ, சென்றடைதல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்கமேல் மூலையில், "'லக்சல', பொது முகாமையாளர் பதவி" எனக் குறிக்கப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :—பதவி தற்காலிகமானது. தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குதவுதல் வேண்டும். நியமனத் தேதியிலிருந்து மூன்றுண்டுகட்குட், கீழ்க்காணும் பாடங்களைக் கொண்ட பரீட்சையொன்றில் சித்தியெய்துமாறு தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் வேண்டப்படுவார். குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அப்பரீட்சையிற் சித்தியெய்தாமை சம்பள ஏற்றத்தைப் பின்போடுதலில் முடிவுறும் :—

1. நிதிப் பிரமாணங்கள்

2. தாபனச் சட்டக் கோவை.

இப்பரீட்சையின் தரம், இ. நி. சே. 3 ம் வகுப்பு உத்தியோகத்தர்கட்காய முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குச் சமமானதாகும்.

3. சம்பளமும் படிகளும் :—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் ஆண்டொன்றுக்கு, ரூபா 6,720/- லிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 360 ஐக் கொண்ட சம்பள ஏற்றங்களைக் கொண்டு, ரூபா 14,400/- வரை உயரும். (வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520/- க்கு முன்)

4. வேண்டப்படுந் தகைமைகள் :—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றுக்குத் திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) மிகச் சிறந்த குணமும், உடனலமுமுள்ளமை.

(ஆ) 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாமையும், 45 வயதுக்கு மேற்படாமையும், (இம்மேல் வயதெல்லை அரசாங்க சேவையில் ஏற்கனவேயுள்ள உத்தியோகத்தர்ட்கு ஏற்புடைத்தன்று)

(இ) நேரடியாகச் சேர்பவர்கட்கு.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சிறப்புப்பட்டம் அல்லது அதியுயர்ந்த தகைமையிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—நிறைவேற்றும் பதவியில் மேற்பார்வைத் திறனுடைமைந்த அனுபவ முள்ளோருக்கும், வர்த்தகம் அல்லது பொருளாதாரவியல் அல்லது புள்ளி விபரவியலிற் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளோர்க்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

**வழங்கல், விற்பனை உத்தியோகத்தர் பதவி**

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திலுள்ள வழங்கல், விற்பனை உத்தியோகத்தர் பதவிக்கு ஸ்ரீ லங்கா (இலங்கை)க் குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணப்படும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.02.05 ந் தேதியன்றோ அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 5304/- லிருந்து ரூபா 144/-ஐக் கொண்ட 9 வருடாந்தச் சம்பள ஏற்றங்களையும், ரூபா 180/-ஐக் கொண்ட 8 வருடாந்தச் சம்பள ஏற்றங்களையும், ரூபா 240/-ஐக் கொண்ட 2 வருடாந்தச் சம்பள ஏற்றங்களையுங் கொண்டு ரூபா 8520/- வரை உயர்வதுடன், ரூபா 6780/- ற்கும், ரூபா 7500/-ற்கு முன்பாக வினைத்திறமைகாண் தடைகளையும் கொண்டதாயமையும்.

3. **நியமன நியதிகள்.**—பதவி நிரந்தரமானது. ஆனால் உபகாரச் சம்பள உரித்துடையதன்று.

**கவனிக்கவும்.**—அரசாங்க சேவையின் நிரந்தர நியமனமொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிந்தெடுக்கப்படின், முதற் கண், அவர் ஒரு குறித்துரைக்கப்படும் காலத்துக்கு அப்பதவியிற் பதிற் சேவையாற்றுமாறு நியமிக்கப்படுவார்.

அவர் சேவையிற் புதிதாய்ச் சேருபவராயின் அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக.—

(அ) அந்நியமனம் 3 வருட பரிசோதனைக் காலத்தைக் கொண்டதாயிருக்கும்.

(ஆ) அவர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்த இப்போ நடைமுறையிலிருப்பவையும், இனிமேற் புகுத்தப்படுபவையுமான சட்டங்கள் விதிகளேகாவதிருப்பின் அவைக்கும் அமைந்தொழுகும்படி வேண்டப்படுவார்.

(இ) அவர் அப்பரிசோதனைக் காலந்திற் சிங்களத்திற் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(ஈ) பரிசோதனைக்காலம் முடிவடைந்ததும் அவரது உறுதிப்படுத்தல், குறிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் அவர் சித்தியெய்துவதைச் சார்ந்தது.

குறிப்பிட்ட காலத்திற்குட் தேர்ச்சிப் பரீட்சையிற் சித்தியடையாமை சம்பள ஏற்றத்தை இடைநிறுத்தும். விதிக்கப்பட்ட காலத்திற்குமேல் இன்னும் 6 மாத காலத்துக்குட் பரீட்சையிற் சித்தியடையாவிடின் இடைநிறுத்துகை, நிறுத்துகையாக மாற்றப்படுவதுடன், அந்நிறுத்துகை பரீட்சையிற் சித்தியடையும் வரையும் தொழிற்படும்.

(உ) **வினைத்திறமைகாண் தடைகள்.**—தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இரு வருடங்கட்குட் சிங்களத்தில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையொன்றிற் சித்தியெய்தும்படி வேண்டப்படுவர். 1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ந் தேதிய 640 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையிற் குறித்துரைக்கப்பட்ட 4 ந் தரத் தேர்ச்சிப் பரீட்சையிற் சித்தியடையாவிடின் சம்பள ஏற்றம் பின்போடப்படும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) மிக நல்ல ஒழுக்கப்பண்பும், உடனலமும் உள்ளவரெனவும்,

(ஆ) 1973.02.05 ஆந் தேதியன்று 25 வயதுக்குக் குறைவாகவோ, 45 வயதுக்கு மேற்படவோ இல்லாதவரெனவும், (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு இவ்வய தெல்லைகள் ஏற்புடையவையாகா) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) (1) (அ) ஆங்கிலமும், கணிதமுமுட்பட மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் ஒரே தடவையிற் பெறப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) அல்லது அதற்கொத்த அன்றி உயர்ந்த பரீட்சையிற் சித்தியடைந்துள்ளமையும்,

(ஆ) வழங்கல் விற்பனை ஆகியவை தொடர்பான வேலை, களஞ்சிய வேலை அல்லது விலைப்படுத்தலில் அரசாங்க நிறுவனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ குறைந்தது 5 வருட அனுபவமும் பெற்றுள்ளமையும்,

அல்லது

(ஈ) (1) (அ) சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம், ஆங்கில முட்பட ஆறுபாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) அல்லது அதற்கொத்த, அன்றியுயர்ந்த பரீட்சையிற் சித்தியடைந்துள்ளமையும்,

(ஆ) வழங்கல், விற்பனை ஆதியவற்றோடு தொடர்பான வேலை, களஞ்சிய வேலை அல்லது விலைப்படுத்தலில் ஓர் அரசாங்க நிறுவனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ குறைந்தது 10 வருட மேற்பார்வையனுபவமும் பெற்றுள்ளமை.

5. அபேட்சகர்கள் பின்வருஞ் சான்றிதழ்களின் படிகளை (மூலச் சான்றிதழ்களல்ல)த் தமது விண்ணப்பங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ்,

(ii) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்,

(iii) அபேட்சகரின் குணம் பற்றிய மூன்று அண்மைக் கால நற் சான்றிதழ்கள். (இப்படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா).

6. அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, தொகுதி (II அ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவைப்பதவிகட்குப் பொருத்தமான பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை)
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1,
15.12.1972.

**வழங்கல், விற்பனை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

**கவனிக்கவும்.**—விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிற் சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல், விற்பனை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட வேண்டும்.

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————
3. பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)
4. நாட்டினம் :————
5. மணமானவரா, தனியாளா ? :————.
6. கல்வித்தகைமை அல்லது தொழிற்றுறைத் தகைமை அல்லது இவ்விரண்டும் :————
7. கல்விக் கூடத்திலிருந்து விலகியது தொடக்கமுள்ள தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சி நெறிகளின் அல்லது இவ்விரண்டினதும் விபரங்கள் :————.
8. இதன் முன் அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, அரசாங்க கூட்டுத்தாபனமொன்றிலோ தொழிலிலமர்ந்திருப்பின் அத்தொழில் நிறுத்தப்படவேண்டிய காரணங்களைக் கூறவும் :————
9. ஒரு நீதிமன்றத்தில் நீர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தையும், அளிக்கப்பட்ட தண்டனையையும் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும் :————.
10. நற்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூன்று பேரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————

————,
கையொப்பம்,

திகதி :————.

1-682—19.01.73 ஆந் திகதிய வர்த்தமானி இல. 43

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தற்காலிகக் களஞ்சியப் பொறுப்பாளர், தரம் 3 ற்கான பதவிகள்

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் தற்காலிகக் களஞ்சியப் பொறுப்பாளர் தரம் 3 ற்கான பதவிகட்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் உள்ளடக்கத்தைக் கொண்ட படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.02.14 ந் தேதியன்றோ அதன்முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—

இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம், ஆண்டொன்றுக்கு ரூபா 2,910—90 தர 17—ரூபா 4,440 ஆகும். வினைத்திறமை காண் தடை ரூபா 3,810/- ற்கு முன்பாகும்.

3. நியமன நியதிகள்.—

1. பதவி தற்காலிகமானது.

2. தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர், அரசாங்க சேவைச் சகாய நிதிக்குதவுமாறு வேண்டப்படுவார்.

4. தகைமைகள்.—

ஒவ்வொரு வேட்பாளரும், தான்—

(அ) சிறந்த குணநலமும், உடனலமுமுள்ளவரெனவும்,

(ஆ) 1973.02.14 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும், 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இவ் வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடையதன்று),

(இ) சிரேஷ்ட தாராதரப்பத்திரமோ, அன்றி, சிங்களம்/தமிழ், எண் கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் (இவற்றுட் கணக்குப் பதிவியல் ஒரு பாடமாயிருத்தல் வேண்டும்) இருதடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெறப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திரமோ, சாதாரணம்) அதற்குச் சமமான, அல்லது உயர்ந்த பரீட்சையிற் சித்தியோ பெற்றுள்ளாரெனவும்,

(ஈ) ஓர் அரசாங்க திணைக்களத்திலோ, அன்றி, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ, களஞ்சியப் பொறுப்பாளராகக் குறைந்தது 3 வருடங் கடமையாற்றிய அனுபவம் பெற்றுள்ளாரெனவும், சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் படிகளை இணைத்தல் வேண்டும்:—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்—,

(ii) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்—,

(iii) அண்மையிற் பெற்ற மூன்று குணநலச் சான்றிதழ்கள். (இவற்றின் படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா)

6. விண்ணப்பகாரர் அரசாங்கம் அல்லது உள்ளூர் ஆட்சி மன்றங்களில் சேவை செய்பவர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது சொந்தச் செலவில் கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோரப்படுவர்.

8. விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதேனும் பிழையானவை எனக் காணப்படின் விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் நீக்கம் செய்யப்படுவதற்கும் உரியவராவர்.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர், (முகாமை)
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.01.08.

தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர், தரம்
3 ற்கான பதவிகள்

(கவனிக்கவும்: "தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர், தரம் 3 ற்கான பதவிகள்" என்ற வாசகம் விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு, பிரதிப் பணிப்பாளர், சிறு கைத்தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலிலனுப்பப்படல் வேண்டும்).

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.

4. நாட்டினம் (சாதியம்) :————.

5. விவாகமானவரா, தனியாளா?:————.

6. கல்வித் தகைமைகள்/தொழிற்றகைமைகள் அல்லது இவ் விரண்டும் :————.
(சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. கல்விக் கூடத்தை விட்டு விலகியதிலிருந்து பெற்ற தொழில்கள், பயிற்சி நெறிகள், அல்லது இவையிரண்டும் :————

8. முன்பு ஓர் அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ தொழிலிலமர்த்தப்பட்டிருந்தீரா எனவும் அப்படியாயின் அதைவிட்டு விலகிய காரணங்களையும் குறிப்பிடுக :————.

9. எப்பொழுதாவது நீதிமன்றமெதிலும், குற்றவியற்றவறெதற்காக வேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீராவெனவும், அப்படியாயின் அக்குற்றத்தின் விவரங்களையும், பெற்ற தண்டனையையும் குறிப்பிடுக :————.

10. குணநலச் சான்றிதழ்கள் பெறப்பட்ட இருவரது பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

1-708—19.02.73 ஆந் திகதிய வர்த்தமானி இல. 43

---

இரத்தினபுரி மாவட்டத்தில் மொரளை பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் கடவத்தை மெதகோரளை பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

மொரளை பிறப்பு, இறப்பு பதிவும் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பமுடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தாராதரங்களும் ஏனைய பிற தாராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளரின் அலுவல்களிலும் உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானம், சன சமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவு தாபன நிலையங்களிலும் பாவைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுகாரர்,
பெரும் பகுதிப் பதிவுகாரருக்காக.

இரத்தினபுரி மாவட்டம்,
பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு தை மாதம் 8 ம் திகதி.

1-710—19.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு— இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி

வாணிகவியல் பிரிவில் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்— கழக ஆண்டு 1973

மருதானை, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும் பின்வரும் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறி | போதனுமொழி | காலம் | நேரம் |
|---|---|---|---|
| வாணிகவியல் தகுதித்தேர்வு | ஆங்கிலம் | 4 வருடங்கள் | பகல்—முழுநேர |

2. இப்பயிற்சி நெறிக்கான அனுமதி ஒரு நேர்முகப் பரீட்சை மூலம் மாத்திரமே நடைபெறும்.

3. **தகவுத்திறன் தேவைகள்**—(அ) ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் :—

(i) கணக்குப் பதிவியலாளர்க்கான உயர்தர வாணிகவியல் (ஆங்கில) தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான பரீட்சையில் சித்தி ; அல்லது

(ii) க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியுடன் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் 4 பாடங்களில் சித்தி (க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் பொருளியல், வாணிகவியலும் நிதியியலும், கணக்கியல், ஆட்சியியல் ஆகியவற்றில் சித்தி எய்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ; அல்லது

(iii) வாணிகவியல் ஆசிரியர்களுக்கான மகரகம ஆசிரியர் கலாசாலை பயிற்றப்பட்ட தராதரப் பத்திரம் ; அல்லது

(iv) பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் வாணிகவியல் தராதரப் பத்திரம் (கணக்கியல் பத்திரப்) பரீட்சையில் சித்தி.

(ஆ) ஏனைய தேவைகள்

(i) சிறந்த ஒழுக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(ii) இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

(iii) 1.1.73 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில், தயாரிக்கப்பட்டு, " பதிவாளர், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, கொழும்பு 10 " என்ற விலாசத்துக்கு 7.2.1973 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

5. உரிய படிவத்தில் சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது விதிக்கப்பட்ட திகதிக்குப் பிந்திப் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ரீ. ஓ. பி. பர்னாந்து,
வித்தியாதிபதி (தொழில்நுட்பக் கல்வி)
மகா வித்தியாதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ௵ ஜனவரி ௴ 9 ந் உ.

(மாதிரிப் படிவம்)

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை

கழகவாண்டு, 1973

**அனுமதிக்கான விண்ணப்பம்**

**முக்கியமானது.**—இப்படிவம் பூரணப்படுத்தப்பட்டு, கொழும்பு 10 இலுள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பதிவாளருக்கு நேரே அனுப்பப்பட வேண்டும்.

1. பயிற்சி நெறி :————.

2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :————. (தெளிவாக எழுதவும்)

3. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.

4. பிறந்த திகதி :————.
   1.1.73 அன்றுள்ளபடி வயது :—வரு :————. மாதம் :————.

5. சாதியம் :————.

6. பால் :————.

7. முகவரி :————.

8. சித்தி எய்திய பரீட்சைகள் (வருடம், மாதம், பாடங்கள், சித்தித் தரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக) :————.

9. இதற்குமுன் இக்கல்லூரியில் யாதேனும் பயிற்சி நெறியைப் பின்பற்றியவர்களால் மட்டுமே இப்பிரிவு நிரப்பப்பட வேண்டும் : ————.
   சேர்வு அட்டை இல. :————.
   பின்பற்றிய பயிற்சி நெறி :————.
   வருடங்கள் :————.

10. பெற்றோரின்/பாதுகாவலரின் பெயரும் முகவரியும் தொழிலும் : ————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென இத்தால் உறுதியளிக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

1–684—19.01.73 ந் திகதி வர்த்தமானி இல. 43

---

## கல்வி அமைச்சு—இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை

நாலு வருட பகல்/மாலை நேர, செயலாண்மையிலான (ஆங்கில மொழிமூல) உயர்தொழில் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

*கழகவாண்டு—1973*

மேற்குறித்த பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) லண்டன் மற்றிக்குலேசன்

(ஆ) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, அங்கீகரிக்கப்பட்ட ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் சித்தி ; இவற்றுள் ஆங்கிலமும் கணிதமும் /ஓர் இயற்கை விஞ்ஞானமும் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் குறைந்தபட்சம் 4 திறமைச் சித்திகள் ஒரே தடவையில் பெற்றிருக்கப்பட வேண்டும்.

**முக்கிய குறிப்பு.**—அங்கீகரிக்கப்பட்ட பாடங்களாவன—

(i) ஆங்கில மொழி (ii) கணிதம் அல்லது ஓர் இயற்கை விஞ்ஞானம், (iii) தற்கால மொழி ஒன்று, புவியியல், வரலாறு, வாணிகவியல் மூலங்கள், கணக்குப் பதிவியல், பொருளியல் அல்லது (ii) இன் கீழ் சேர்க்கப்படாத இயற்கை விஞ்ஞானம் ஒன்று.

(இ) தத்துவம் பெற்ற செயலாளர் சங்க ஆரம்பப் பரீட்சையில் சித்தி.

(ஈ) தத்துவம் பெற்ற செயலாளர் சங்க ஆரம்பப் பரீட்சையிலிருந்து விலக்கு.

மாலைநேரப் பயிற்சி நெறிக்கான மாணவர்களைப் பொறுத்தவரையில், கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனி அலுவலகம் ஒன்றில் அல்லது அரசாங்க அதிகார சபையில் அல்லது அரசாங்க சபையில் அல்லது சங்கத்தில் அல்லது நிலையத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தத்துவம் பெற்ற செயலாளர் சங்கத்தின்/செயலாளர் கூட்டுத்தாபனத்தின் இடைமானிப் பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் அல்லது இவ்விரு சபைகளில் ஏதனதும் இறுதிப் பரீட்சையின் ஒரு பிரிவில் அல்லது பகுதியில் சித்தி எய்தியவர்கள் பயிற்சி நெறியின் பொருத்தமுடைய வருட வகுப்புக்கு நேரே அனுமதிக்கப்படுவார்கள்.

2. தொடர்புபட்ட துறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பவர்களிடமிருந்து மாத்திரமே மாலைநேரப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள், வேலைகொள்பவர் மூலம் அனுப்பப்பட வேண்டியதுடன் அவர் விண்ணப்பத்தைச் சிபார்சு செய்யும்போது விண்ணப்பதாரியின் வேலையின் தன்மையையும் சேவைக் காலத்தையும் திட்டமாகக் குறிப்பிட வேண்டும். மேற்குறித்த தேவைக்கு அமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. வயது.—1.1.73 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண் வேண்டும்.

4. இலங்கைப் பிரசைகளிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. மேற்குறித்த கற்கை நெறி தொடர்பில் புகுமுகப் பரீட்சை ஒன்றும் நடைபெறமாட்டாது. நேர்முகப் பரீட்சை ஒன்று மூலமே மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

6. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு "பதிவாளர், இலங்கைத் தொழில் நுட்பக் கல் லூரி, கொழும்பு 10" என்ற விலாசத்துக்கு 7.2.1973 அன்று அல் லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. உரிய படிவத்தில் சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது விதிக்கப்பட்ட திகதிக்குப் பிந்திப் பெற்றுக்கொள்ளப் படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. மாலைநேரப் பயிற்சிநெறியைப் பின்பற்றுதற்குத் தெரிவு செய் யப்படுவோரிடமிருந்து, கழகவாண்டின் விதிக்கப்பட்ட 9 மாதங் களுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 15/- வீதம் கட்டணம் அறவிடப் படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ரீ. ஓ. பி. பர்னாந்து,
வித்தியாதிபதி (தொழில்நுட்பக் கல்வி),
மகா வித்தியாதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
9.1.1973.

(மாதிரிப் படிவம்)

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை

கழகவாண்டு, 1973

**அனுமதிக்கான விண்ணப்பம்**

முக்கியமானது.—இப்படிவம் பூரணப்படுத்தப்பட்டு கொழும்பு 10 இலுள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பதிவாளருக்கு நேரே அனுப்பப்பட வேண்டும்.

1. பயிற்சி நெறி :———. பகல்/மாலைநேர
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :———.
(தெளிவாக எழுதவும்)
3. முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
4. பிறந்த திகதி :———.
1.1.73 அன்றுள்ளபடி வயது :— வரு:—— மாதம் ——.
5. சாகியம் :———.
6. பால் :———.
7. சொந்த முகவரி :———.
8. தொழில் நிலைய முகவரி :———.
9. சித்தி எய்திய பரீட்சைகள் (வருடம், மாதம், பாடங்கள், சித் தித்தரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக) :
10. இதற்குமுன் இக்கல்லூரியில் யாதேனும் பயிற்சி நெறியைப் பின்பற்றியவர்களால் மட்டுமே இப்பிரிவு நிரப்பப்பட வேண்டும் :
சேர்வு அட்டை இல. :
பின்பற்றிய பயிற்சி நெறி :———.
வருடங்கள் :———.
(பெற்ற தராதரப் பத்திரத்தைக் குறிப்பிடுக)
11. (மாலைநேர பயிற்சி நெறிக்கு அனுமதி கோருபவரால் நிரப் பப்பட வேண்டியது) விண்ணப்பதாரியின் தொழில், வேலை கொள்வோரின் பெயரும் முகவரியும், விண்ணப்ப தாரி புரியும் கடமைகளின் தன்மை பற்றிய முழு விபரங் கள் ஆகியவற்றைக் கொடுக்கவும்)
12. பெற்றோரின்/பாதுகாவலாளரின் பெயரும், முகவரியும் தொழிலும் :———.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவை யென இத்தால் உறுதியளிக்கின்றேன்.

———.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

1-686—10.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

**நிலஅளவைத் திணைக்களம்**

அளவையியலிலும் படமாக்கலிலும் பயிற்றும் நிலையம்—தியத்தலாவை

**1973 ம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பமாகும் கல்வியாண்டு**

தியத்தலாவையிலுள்ள அளவையியலிலும் படமாக்கலிலும் பயிற் றும் நிலையத்தில் ஒரு வருடந்தங்கியிருந்து பயிற்சி பெறப் பிரவேசித்தற்கான விண்ணப்பங்கள் ஆண் விண்ணப்பதாரர்களிட மிருந்து, 15 மார்ச்சு 1973 ஆந் திகதி வரை தியத்தலாவை அளவையியலிலும் படமாக்கலிலும், உதவி நிலஅளவை நாயகம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்கள் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு 5, கிருல வீதியிலுள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களின் அலுவலகம் (பயிற்சி நிலையக் கிளை), யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், திரிகோணமலை, புத்தளம், கண்டி, பதுளை, மட்டக்களப்பு, பொலந்நறுவை, குருநாகல், இரத்தினபுரி, காலி அல்லது அம்பாந்தோட்டை முதலிய இடங்களிலுள்ள பெரும்பாக நிலஅளவை அலுவலகங்கள், உதவி நில அளவை நாயகம் (பயிற்சி) அளவையியலிலும் படமாக்கலிலும் பயிற்றும் நிலையம்—தியத்தலாவை.

விண்ணப்பப் பத்திரங்களில் ரூபா 1 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அதன்மேல் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும். குறைபாடுகள் உள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தேவைப்படும் விபரங்களை தியத்தலாவையிலுள்ள அளவையிய லிலும் படமாக்கலிலும் பயிற்சி நிறுவனத்தின் உதவி நில அளவை நாயகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கெனவே அரசாங்க சேவையில் அல்லது அரசினர் கூட்டுத் தாபனங்களில் அல்லது சபைகளில் சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள், கீழே 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருப்பின் அந்தந்தத்திணைக்கள அதிபதி அல்லது கூட்டுத்தாபனத்தினதோ சபையினதோ தலைவருக் கூடாக, விண்ணப்பதாரர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படும் பட்சத் தில் அவருக்கு முழுச்சம்பள கல்வி விடுமுறை ஒரு வருட காலத் துக்கு வழங்கப்படக்கூடுமென்ற அவரது அத்தாட்சிப் பத்திரத் துடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

2. தகவுத்திறன்.—இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர்—

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும்; அதாவது பாரம்பரை யாக அல்லது பதிவினால் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் கல்வித் தகைமைகள் உடையவராயிருத்தல் வேண்டும்.

(1)—(அ) தூய கணிதத்தில் திறமைச் சித்தி கொண்ட சிரேட்ட பாடசாலை சான்றிதழ்.

(1970-71 கல்வியாண்டுக்கு முன் கீழே பந்தி 2—(அ) வில் குறிக்கப்பட்டுள்ள தகைமைச் சான்றிதழை பெற்றுக்கொண்ட விண்ணப்ப தாரர்களாயின் தூயகணிதத்தில் சாதாரண சித்தியும்) பௌதிகவியலில் சித்தியும் அல்லது (ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதா ரண) பரீட்சையில் இருமுறைக்கு மேற்படாத எத்தனிப்பில் கீழே தரப்பட்டிருக்கும் வண்ணம் சித்தியெய்திய ஆறு பாடங்கள்.

(1) ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழில் சித்தி.
(2) தூய கணிதத்தில் திறமைச் சித்தி.
(3) பௌதிகவியலில் சித்தி.
(4) மற்றைய மூன்று பாடங்களில் சித்தி.
இவற்றுடன்

(2) (அ) கட்டுப்பெத்தையிலுள்ள செய்முறைத் தொழில் நுட்பவியல் பயிற்சி நிறுவனத்தில் அல்லது ஒரு கனிஷ்ட தொழில்நுட்ப கல்லூரியில் அல்லது பலதொழில் நுட்பவியல் கல்லூரியில் அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் அளவைப் பயிற்சிப் பாடசாலையில், அளவையியலிலும் மட்டமாக்கலிலும் ஒரு வருட முழுநேரப் பயிற்சி அல்லது மூன்று வருட மாலை நேரப் பயிற்சிசெய்து முடித்தற் கான சான்றிதழ்.

அல்லது

(ஆ) இவற்றுக்கு சமமான தொழில் நுட்பத் தகைமை கள்,

(3) கீழ்க்குறிக்கப்படும் தகைமைகள் உடைய விண்ணப்ப தாரர்க்கும் அனுமதி வழங்கப்படும்.

(அ) கணிதத்தில் பட்டதாரி.

(ஆ) நில அளவைக்கு சமமான அறிவுடன் க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தி. (உதாரணம்: தொழில்நுட்ப வல்லுநர் 1 ஆம் ஆண்டைப் பூர்த்திசெய்தவர்கள் அல்லது பூகோளப் பாடத்தில் 2 ஆம் ஆண்டைப் பூர்த்திசெய்தவர்கள்)

3. தகைமைக்குரிய அத்தாட்சிப்பத்திரங்கள் :—கீழ்வரும் அத்தாட்சிப்பத்திரங்கள் (மூலங்கள்) பந்தி 4இல் குறிப்பிடப்பட்ட எழுத்துப் பரீட்சைக்குமுன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) 2(ஆ) (2) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் அதிபரால் கைச்சாத்திடப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்.

(ஆ) விண்ணப்பகாரரின் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு பெற்றதற்குரிய சான்றிதழ் அல்லது பிரஜா உரிமைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அரசாங்கக் கடிதத்தின் மூலப் பிரதி (தேவைக்கேற்றபடி).

(ஈ) 2(ஆ) பந்தியிற் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்குரிய சான்றிதழ். இன்னும் மூலச்சான்றிதழ் கிடைக்கப் பெறுவிடில் நிறுவனத்தின் அதிபரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. பிரவேசம்

தேவையான தகைமைகளையுடைய மனுதாரர்கள், தூய கணிதம் (200 புள்ளிகள்) பௌதிகவியல் (100 புள்ளிகள்) பொது அறிவு (100 புள்ளிகள்) நுண்ணறிவு (300 புள்ளிகள்) அளவையியலும் மட்டம் பார்த்தலும் (200 புள்ளிகள்) படம் வரைவியல் (100 புள்ளிகள்) ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்றும்படி வேண்டப்படுவர்.

பரீட்சையின் இடம், திகதி, நேரம் முதலியன தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும். அதன்பின் பொருத்தமான பரீட்சார்த்திகளை நேர்முகப் பரீட்சையிட்டு இறுதித் தேர்வு செய்யப்படும்.

இப்பயிற்சிக்குரிய பிரவேசம் மேலும் விண்ணப்பதாரர் ஒரு மாவட்ட வைத்தியரின் குறிப்பிட்ட வைத்திய பரிசோதனையில் சித்தி அடைவதில் தங்கியுள்ளது. ஆனால் இது அரசாங்க அலுவலகத்தில் தொழில் பெறும் விண்ணப்பதாரருக்குரிய முழு வைத்திய பரிசோதனையாக இருக்கத் தேவையில்லை.

இவ் விண்ணப்பதாரர், பயிற்சிபெறவும், வெளிக்கள வேலைகள் செய்வதற்கும் உடற்றகுதி உடையவர் என்ற மாவட்ட மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ் போதுமானது. பயிற்சி தொடங்குவதற்கு முன்பு இச்சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

போதனைகளை கவனமாகக் கிரகித்துத் தொடர்வதிலும் அதனில் தம்மை ஈடுபடுத்துவதிலும் ஆர்வங்காட்டாத மாணவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இடைநிறுத்தப்படுவதற்கு ஆளாவார்கள். பிரவேசம் அல்லது இடைநிறுத்தல் சம்பந்தமாக நில அளவையாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதி முடியானது.

5. இப்பயிற்சி சிங்களத்திலும், தமிழிலும் நடைபெறும்.

6. விடுதி வசதி

மாணவர்களுக்கு, பிரமச்சாரிகளுக்கான விடுதி வசதியுடன் (இரண்டு அல்லது மூன்று அத்தியாவசியமான தளபாடங்களுடன்) ஒரு பொதுச் சமையலறையும் கொடுக்கப்படும்.

7. செலவும் கட்டணங்களும்

போதனைச் செலவோ, நூல்நிலையச் செலவோ அறவிடப்பட மாட்டாது. பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டோர் அழிவு சேதங்களுக்குக் காப்பீடாக, திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய, வைப்புப் பணமாக ரூபா 30/- கட்ட வேண்டியவர்களாவார்கள்.

8. தகுதித் தேர்வுப் பட்டம்

ஓர் உயர்தர தொழில் நுட்பவல்லுநரின் தகைமை எல்லைக்கு நடாத்தப்படும். சித்தியெய்தும் மனுதாரர்களுக்கு அளவையியல் தகுதித் தேர்வுப் பத்திரம் வழங்கப்படும்.

**இத்தகுதித் தேர்வுப் பத்திரம், திணைக்களத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் என எந்தவிதமான உத்தரவாதத்தையும் தருவதாகக் கருதக் கூடாது.**

எனினும், அளவைத் திணைக்களத்திற்கு தேவை ஏற்படும் பொழுது அரச ஆலோசனைச் சபையின் சம்மதத்துடன் தொழிற் பயிற்சி முடிந்தபொழுது வயது 30 க்குள்ளாக இருந்து தகுதித் தேர்வுப் பட்டச் சான்றிதழ் பெற்றவர்கள் நில அளவைத்திணைக்களத்தில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுவர். நில அளவைத் திணைக்களத்தில் சேர்க்கப்படாதவர்களில் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்தவர்களாயும், அளவையியலிலும் மட்டமாக்கலிலும் படம் வரைதலிலும் நடாத்தப்படும் செய்முறை பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களாயும் இருப்பவர்களுக்கு, உத்தரவுபெற்ற நில அளவையாளராக வேலைசெய்வதற்குரிய பத்திரம் வழங்கப்படும்.

ஆர். ஏ. குணவர்தன,
பதில் நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
பயிற்சி நிலையப் பகுதி,
த. பெ. 506,
கொழும்பு-5, 1973-1-9.
1-707—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

இல. 1/23/29/3(ஜி)

**சிறுப்பர் சேவையின் III ம் வகுப்புக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை—மார்ச் 1973**

1. பரீட்சைத் தேதி 1973, மார்ச் 17 ஆந் தேதி

சிறுப்பர் சேவையின் III ஆம் வகுப்பிற் சேரவிரும்பும் பரீட்சார்த்திகளுக்குரிய போட்டிப் பரீட்சையொன்று கொழும்பிலும் பின்வரும் நிலையங்களிலும் 1973, மார்ச் 17 ஆந் தேதி நடாத்தப்படும் :—கொழும்பு, கம்பகா, நீர்கொழும்பு, மொரட்டுவா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, குருநாகல், புத்தளம், சிலாபம், அனுராதபுரம், வதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை.

எந்தவொரு நிலையத்திலும் போதியளவு பரீட்சார்த்திகள் தோன்றுவிட்டால் அந்நிலையம் தவிர்க்கப்படலாம்.

குறிப்பு.—சேர்க்கப்படும் பெண்களின் வீதம் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டவாறாகும்.

2. **பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதவேண்டிய மொழி.**—பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோன்றுவதற்குத் தகுதியளிக்கும் பரீட்சையை எந்த மொழியில் எழுதிச் சித்தியெய்தினர்களோ அந்த மொழியிலேயே இப்பரீட்சையைச் செய்தல் வேண்டும் (அதாவது சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில்), எனினும்—

(அ) தகுதியளிக்கும் பரீட்சையின் பல்வேறு பாடங்களையும் வெவ்வேறு மொழிகளில் எடுத்துச் சித்தியெய்திய பரீட்சார்த்தி ஒருவர் அவற்றுக்கு நேரொத்த பாடங்களை இப் பரீட்சையிலும் அவ்வம் மொழிகளிலேயே செய்தல் வேண்டும் ;

(ஆ) 5 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளில்லாத 6(i) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக உதவிச் சிறுப்பர்மார் தாங்கள் கற்றுள்ள மொழிமூலம் இப்பரீட்சையை முற்றாக எழுதலாம். தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கற்றுள்ள ஒருவர் தான் விரும்பினுல் சிங்களத்தில் இப்பரீட்சையை எழுதலாம் ;

(இ) தகுதியளிக்கும் பரீட்சையைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்தியொருவர் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கற்றுள்ள பரீட்சார்த்தி ஒருவர் தான் விரும்பினுல் இப்பரீட்சையைச் சிங்களத்தில் எழுதலாம்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(i) இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படும் தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் நிரந்தரமானவை.

(ii) 1972, டிசெம்பர் 31 ஆந் தேதியில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவியொன்றினை வகிக்கும் பரீட்சார்த்திகள், இப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் அவர்கள் நியமிக்கப்படும் பதவிகளில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைமையைத் தொடர்ந்துமுடையவராகவிருப்பர். 1971, டிசெம்பர் 31 ஆந் தேதியில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைமையற்ற பதவியொன்றினை வகிக்கும் பரீட்சார்த்திகள், 24.12.1971 இன் 42 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகை வழங்குவர்.

(iii) அவர்கள் இடமாற்றத்துக்காளாவர். இலங்கையில், எந் நிலையத்திற்காவது அனுப்பப்படலாம்.

(iv) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டில் 53 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளனவும் வருங்காலத்தில் செய்யப்படக் கூடியனவுமான எந்தச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகவேண்டும். என்னும் நிபந்தனையை ஏற்றல்வேண்டும்.

சிறுப்பர்களாக நியமிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள், அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் "புதிதாகச் சேர்ந்தோர்" ஆனால், அவர்கள் தம்முடைய தகுதி காண் காலத்தில் அரசகரும மொழியாகிய சிங்கள மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும். தகுதிகாண்கால முடிவில் இப்பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்தல் அவர்களின் திருத்திகரமான வேலையையும் நடத்தையையும் விதிக்கப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்துவதையும் பொறுத்திருக்கும்.

(v) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பின்வருமாறு பிணை கொடுத்தல் வேண்டும் :—

(அ) 2,000 ரூபாவில் உத்தரவாத முறி.

(ஆ) 2,500 ரூபா காசு.

(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காசுப்பிணையை தொடக்கத்தில் 1,250 ரூபாவாகவும் பின்னர் ஒவ்வொரு மாதமும் தவணைப்பணமாக 20 ரூபாவும் ஈற்றில் 10 ரூபாவாகவுமாய் 2,500 ரூபாவையும் செலுத்தலாம். அதன்பின்னர் குறித்த உத்தியோகத்தர் விரும்பினால் 10 ரூபா மாதத் தவணைப்பணமாக காசுப்பிணை 4,000 ரூபா வாகும்வரை தொடர்ந்து செலுத்தி உத்தரவாதச் சங்கமூலப் பிணையை நிறுத்தலாம்.

4. சம்பளம்.—பரீட்சையில் சித்தியெய்துவோர் சிறுப்பர் சேவையின் III ஆம் வகுப்பில் பின்வரும் திரட்டிய சம்பள வீதத்தில் நியமிக்கப்படுவர். ஆரம்பச் சம்பளம் ஆண்டுக்கு 3,000 ரூபா. ஆண்டுக்கு 90 ரூபா வீதம் 24 ஆண்டு ஏற்றத்துக்குப் பின்னர் 5,160 ரூபா பெறுவர். இந்தச் சம்பளத் திட்டத்தில் ஆண்டுக்கு 3,900 ரூபா பெறுமுன்னர் தகைமைத் தடைப்பரீட்சையுண்டு.

5. தகவுத் திறன்.—பொது நிபந்தனைகள் :

(i) பரீட்சார்த்தி பண்புடையவராயிருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

(iii) பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) மொழி, எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்படக் குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் இலங்கைச் சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரம்.

(ஆ) இலண்டன் மற்றிக்குலேசன் தாரதரப் பத்திரம் அல்லது கேம்பிரிச்சு சீனியர் தாரதரப் பத்திரம்.

(இ) பின்வருவனவற்றில் பொதுக்கல்வித் தாரதரப் பத்திரம் (சாதாரணதரம்) :—

(1) சிங்களம்/தமிழ் மொழி,

(2) எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம்.

(3) பிற நான்கு பாடங்கள், ஆனால் இப்பாடங்களுள் ஐந்தில் ஒரேயொருமுறையில் சித்தியடைந்திருத்தலுடன், மொழி எண் கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்படக் குறைந்தது நான்கு பாடங்களிலேனும் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) சிரேட்ட மணையியற்கலைத் தாரதரப் பத்திரம்.

(உ) இலங்கை கல்வித் திணைக்களத்துச் சிங்கள/தமிழ் வர்த்தகத் தாரதரப் பத்திரம்.

குறிப்பு.—மேலே கூறப்பட்டுள்ள பரீட்சைகளில் எதையாவது எடுத்து இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களின் முடிவுத்தேதிக்கு முன்னர் அதன் பெறுபேறு கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) 1973, மார்ச் 1 ஆந் தேதியில் பரீட்சார்த்திகள் 17 வயதுக்குக் குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

5A. தகவுத்திறன். இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சியச் சேவையிற் சேர்ந்திருக்கும் சிவில் உத்தியோகத்தர்களுக்கும் யுத்தப் படைகளில் முன் சேவையாற்றியவர்க்குமான விசேட சலுகைகள் :—

ஐக்கிய இராச்சியச் சேவையிலிருந்து 1956 ஆம் ஆண்டு, யூலை மாதம் 6 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் அல்லது தளங்களை எடுத்துக் கொள்ள அரசாங்கம் நிச்சயித்ததன் பயனாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் இலங்கையரான சிவில் உத்தியோகத்தர்களுக்கும், நாராகென்பிற்றவில் (அண்டேசன் நிலையம்) இருந்த இராச கடற்படைக் கம்பியிலி நிலையத்தை திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பெரிய கரைச்சி என்னும் இடத்துக்கு மாற்ற அரசாங்கம் நிச்சயித்ததன் பயனாக, 1954 ஆம் ஆண்டு செற்றம்பர் மாதம் 27 ஆந் தேதிக்குப் பின் அந்நிலையத்திலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பின்வரும் சலுகைகள் உரியனவாகும் :

(i) 5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில் ஐக்கியராச்சியச் சேவைகளில் அவர்கள் சேவையாற்றிய காலத்தைத் தங்கள் வயதில் இருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர் ; ஆனால் அப்படிச் செய்வதற்கு அத்தகைய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருக்க வேண்டும்.

(ii) 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 9 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் ஐக்கியராச்சியச் சேவைகளில் தொடர்ச்சியாக குறைந்த பட்சம் நாலு ஆண்டுச் சேவை திருப்திகரமாக முடித்து, 5(iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்காதவர்கள், 6(iii)A (அ) ஆம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்தபின், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

5B. தகவுத்திறன், யுத்தச் சேவைகளில் முன்னைநாள் சேவையாற்றியவர்கட்கு விசேட சலுகைகள்

(i) 5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில் படைச் சேவை முன்னைநாட் சேவையாளர், அதாவது, நியமப் படையில் சேவை செய்த பின்னர் ஒதுக்கப்படைக்கு மாற்றப்பட்ட படைச் சேவை உறுப்பினர் அல்லது அச்சேவையில் அவமானம் சூட்டி விலக்கப்பட்ட, அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது இழுக்குடன் பதவி நீக்கப்பட்ட, அல்லது எவ்வொழுக்கவீனம் காரணமாகவேனும் சேவையிலிருந்து விலகவேண்டியிருந்தவர்கள் அல்லாத படைச் சேவையைவிட்டு விலகிய உத்தியோகத்தர்களும் சேவையாளர்களும் நியமப்படையில் தாம் ஆற்றிய சேவைக் காலத்தைத் தம் வயதில் இருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் ;

(ii) நியமப்படையில் நாலாண்டுக்குக் குறையாத காலச் சேவையாற்றி 5(iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருந்தவர்கள் 6(iii) A (அ) பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

5C. தகவுத்திறன், ஆட்குறைப்பின் பயனாக வேலையிழந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள்.—நிரந்தர முறையிலோ தற்காலிக முறையிலோ அரசாங்க சேவையிலிருந்து வேலையோ ஒழுக்கமோ திருப்திகரமாயில்லை என்ற காரணத்தினாலன்றி வேறு காரணங்களால் வேலையிழந்திருப்பவர்கள் பின்வரும் சலுகைகளுக்கு அருகராவர் :

5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அல்லது திருப்தியற்ற வேலை அல்லது பதவியிலிருந்து தாமாக விலகிக்கொண்டது காரணமாக வேலையிழக்காத அரசாங்கத்திற் சேவையாற்றிய காலத்தைத் தம் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

6. தகவுத்திறன், அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகைகள்.—(i) 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 9 ஆந் திகதியன்று 2 ஆண்டுகள் தொடர்ந்து சேவைசெய்து முடித்தவர்களான தற்காலிக உதவிச்சிறுப்பர்கள் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்குக் குறைந்தவர்களாயிருப்பின், கல்வித் தாரதரங்களைக் கவனியாது இப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

*அரசாங்க சேவையிற் சேர்தற்கான சகல நோக்கங்களுக்காகவும் "இலங்கையர்" என்ற பதம் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட ஓர் இலங்கைப் பிரசை என்று பொருள்படும்.

(ii) பந்தி 6 (i) இல் குறிப்பிட்டுள்ள சலுகைக்குத் தகுதியற்றவர்களாய் அரசாங்க சேவையில் தற்காலிக பதவிகளை வகிப்பவர்கள்—

(அ) பந்தி 5 (iii) இல் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தராதரங்கள் உள்ளவர்களாகவும்;

(ஆ) 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் தேதியன்று 45 வயதுக்குட்பட்டவர்களாகவும்;

(இ) 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு நேரடுத்து முந்தி அரசாங்கத்தின்கீழ் குறைந்தது ஓராண்டாவது திருப்திகரமாகத் தொடர்ந்து சேவை செய்து முடித்தவர்களாகவுமிருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ii) A. பந்தி 6 (i), 6 (ii) இல் குறிப்பிட்டுள்ள சலுகைக்குத் தகுதியற்றவர்களாயிருப்பினும் 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு நேரடுத்து முந்தி அரசாங்கத்தின் கீழ் குறைந்தது 4 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்து முடிந்தவர்களாக அரசாங்க சேவையில் தற்காலிக பதவிகள் வகிப்பவர்கள்;

(அ) 6 (iii) A (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமையுடையவர்களும்;

(ஆ) 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(iii) கீழே குறிப்பு (iii) இல் உள்ள விதிவிலக்குகளுக்கு அமைவாய் 1973 ம் ஆண்டு சனவரி 9 ஆந் தேதியில் அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவிகளை வகிப்பவர்கள் :—

(அ) பந்தி 5 (iii) இல் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தராதரங்கள் உள்ளவர்களாகவும்;

(ஆ) 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் தேதியன்று 45 வயதுக் குட்பட்டவர்களாகவும் இருப்பதுடன்;

(இ) அவர்களின் சேவைகள் திருப்திகரமானவையென அவர்களது திணைக்களத் தலைவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவர்கள் சிறுப்பர் சேவைக்கு நியமிக்கப்படத் தெரிந்தெடுக்கப்படின் திணைக்களத் தலைவர்கள் அவர்களை விடுவிக்கத் தயாராயிருக்குமிடத்து; இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

(iii) A. 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ந் தேதிக்கு உடன் முந்திக் குறைந்தபட்சம் தொடர்ச்சியான நாலாண்டுச் சேவை அரசாங்கத்தின் கீழ் முடிந்திருக்கும் நிரந்தரப் பதவியிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் (iii) ஆம் குறிப்பில், கீழே தரப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு அமைவாய் இப்பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் பின்வருவனவற்றில் ஒன்றை உடையவராயிருத்தல் வேண்டும்.

(i) கேம்பிரிச்சு கனிட்ட தராதரப்பத்திரம்;

(ii) கல்வித் திணைக்களத்தின் க. பா. த. ப.;

(iii) கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் க. பா. த. ப.;

(iv) இலண்டன் வணிகக் கழகத்தின் இலங்கைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வர்த்தக கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளிநாடுகள்) அல்லது உயர்தர கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளிநாடுகள்);

(v) இலங்கை வணிகக் கழகத்திலும் இலங்கை கல்வித் திணைக்களத்திலும் வழங்கப்படும் வர்த்தகக் கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தக கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பிரிவு);

(vi) கல்வி அமைச்சின் கீழுள்ள தொழினுட்பக் கல்லூரிகளால் அளிக்கப்படும் (கணக்குப் பதிபவர்க்கான அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர்) வர்த்தக தராதரப்பத்திரம் அல்லது உயர்தர வர்த்தக தராதரப்பத்திரம்.

(ஆ) 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியன்று 45 வயதுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் அவர்களுடைய சேவை திருப்திகரமானவை என அத்தாட்சிப்படுத்துவதோடு அவர்கள் சிறுப்பர் சேவையில் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப் பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்குத் தயாராகவுமிருத்தல் வேண்டும்.

குறிப்பு—

(i) 1956 ஆம் ஆண்டு செற்றம்பர் மாதம் 24 ஆந் தேதிக்கு முன் நியமிக்கப்பட்டு, மேற்போந்த 6 (iii), 6(iii) A வகைகளிற் சேர்ந்து இப்பரீட்சையிற் சித்தி எய்துபவர்கள் அரசாங்க மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக "முன்னர்ச் சேர்ந்தவர்கள்" என்று கருதப்படுவர்.

(ii) இவ்வறிக்கையின் 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாய் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பாகம் (II) ஆம் உட்பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட பொது நிபந்தனைகளிற் காணப்படும் யுத்த சேவைச் சலுகைகளுக்கு அருகதையுடையராகார்.

(iii) அளவைத் திணைக்கள எழுதுவினைஞர், வரைவாளர் சேவை, இரப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை, தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை, பிரதி நிதிகள் சபை எழுதுவினைஞர் சேவை, ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவை, புகையிரத எழுதுவினைஞர் சேவை, அஞ்சல் எழுதுவினைஞர் சேவை, சுங்க எழுதுவினைஞர் சேவை, உள்ளூராட்சிச் சேவை ஆணையாளர் எழுதுவினைஞர் சேவை ஆகிய திணைக்கள எழுதுவினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் மாணவ ஆசிரியர்களும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு ஊழியர்களும் சபைகளும் கூட்டுத்தாபனங்களும் அவற்றை ஒத்த தன்னாட்சியுள்ள சபைகளும் 1963.12.4 இன் 629 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதிகளுள் அடங்கும் நிரந்தர, தற்காலிக, அமய ஊழியர்களும் படைச் சேவையிலும் இலங்கைப் பொலிசு சேவையிலுமுள்ள உத்தியோகத்தர்களும் 6 (iii), 6 (iii) A பந்திகளின் கீழ் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியுடையவராவர். எனினும் இப்பொழுது ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ள திணைக்கள எழுதுவினைஞர் சேவை உத்தியோகத்தர்கள் தகுதியுடையவராவர்.

7. **விண்ணப்பங்கள்.**—(i) இவ்வறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்திற் கிணங்கத் தமது சொந்த விண்ணப்பப்படிவங்களை ஒரு முழுத்தாளின் அரைத்தாளில் தாம் பரீட்சை எடுக்க உத்தேசித்துள்ள மொழியில் தயாரித்துத் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாளே உபயோகிக்கப்படல் வேண்டும். 1 முதல் 6 வரையுள்ள கூடுகள் 1 ஆம் பக்கத்திலும் 7, 8, 9 ஆம் கூடுகள் 2 ஆம் பக்கத்திலும் (படிவத்தின் பின்புறத்தில்) இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் பரீட்சை ஆணையாளர், த. பெ. இல. 1503, கொழும்பு 2 என்னும் விலாசத்தை 1973, பெப்ருவரி 10 ஆந் தேதியோ அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும். கடித உறையின் மேற்பக்கத்து இடதுபுற மூலையில் பரீட்சைப் பெயரும் நிலையமும் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தில் 40 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி, பரீட்சார்த்தி தனது கையொப்பத்தையும் திகதியையுமிட்டு முறையாகப் பெறுமதி நீக்கஞ் செய்தல் வேண்டும். இப்பொழுது அரச சேவையில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய நிரந்தர உத்தியோகத்தர்கள் 20 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையுமிட்டு முறையாகப் பெறுமதி நீக்கஞ்செய்தல் வேண்டும். (இப்பொழுது அரச சேவையில் நிரந்தரமற்ற, இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்ற உத்தியோகத்தர்கள் 40 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டுதல் வேண்டும்).

(iv) ஏற்கனவே அரசாங்க திணைக்களங்களில் வேலை செய்து வரும் பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தாங்கள் வேலை செய்யும் அரசாங்கப் பகுதிகளின் தலைமை அதிகாரிகளின் மூலமாக அனுப்புதல் வேண்டும். பந்தி 5C இன் பிரகாரம் தகுதியுரிமை கோரும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைத் தாம் கடைசியாக வேலை செய்த அரசாங்கப் பகுதிகளின் தலைமை அதிகாரிகள் மூலமாக அனுப்புதல்வேண்டும். எந்தப் பரீட்சார்த்தியாவது இங்ஙனம் செய்யத் தவறினால் அவர் தகுதியற்றவராகக் கருதப்படுவார். 1973 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கத்தக்கதாகத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பும்படி கேட்டு அவற்றைத் தாம் வேலை செய்யும் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களுக்கு நேரகாலத்துடன் அனுப்பிவைக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் நேரடிப் பரீட்சை ஆணையாளரின் பெயருக்கோ அல்லது அத்திணைக்களத்திலுள்ள பிற உத்தியோகத்தர் எவருக்குமோ அனுப்பப்படலாகாது.

8. *பரீட்சைக்கு அனுமதி*.—(i) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத்தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்துக்குச் சமூகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தின்று தமது அனுமதிப்பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் இவ்வறிவித்தலுக்குப் பின்னால் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைத் தினத்துக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னாகவாவது பரீட்சார்த்தியொருவர் தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாதிருந்தால், மலாய் வீதி, தபாற் பெட்டி 1503, கொழும்பு 2 (தந்தி விலாசம் : "பரீட்சைகள்" கொழும்பு), என்னும் விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளரோடு தாமதமின்றித் தொடர்பு கொண்டு, தமக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதை பின்வரும் தகவலைக் கொடுத்து அறிவித்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) முழுப்பெயர் ;

(3) முழு அஞ்சல் விலாசம் ;

(4) பரீட்சார்த்தி பரீட்சையை எடுப்பதற்கு விண்ணப்பஞ் செய்து கொண்ட பரீட்சை நிலையம் ;

(5) தபாற் கந்தோரும் பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

(ii) பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக்கொண்டதாகாது. எனினும், பரீட்சை ஆணையாளர் தமது உசிதாசாரப்படி, பரீட்சார்த்தி யொருவருக்கு, இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை, பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

9. *அடையாளச் சீட்டுகள்*.—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் ;

(அ) தபாற் கந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாதனம் (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்க திணைக்களத்தில், பொதுக் கூட்டுத்தாபனத்தில் அல்லது மற்றும் நியதிச்சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்துக் கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம் ;

(ஈ) கடவுச்சீட்டுப் பருமனுடைய ஒளிப்படமொன்றும் (ஒளிப்படத்தின் மறு புறத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு இக்கையொப்பமும் ஒளிப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர் இவ்வொளிப்படத்தை வைத்திருப்பார்).

மேலே குறிப்பிட்டுள்ள சாதனங்களில் ஒன்றைக் கொண்டுவராத பரீட்சார்த்தியொருவரின் பரீட்சையுரிமை தற்காலிகமானதெனக் கருதப்படும். பரீட்சை அதிகாரியின் தற்றுணிப்புப்படி அத்தகைய பரீட்சையுரிமை நிராகரிக்கப்படலாம்.

10. *தகுதிச்சாதனங்கள்*

(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப்படலாகாது ; ஆனால் பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான, விவரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவுபெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு, நிராகரிக்கப்படினும் படலாம்.

(ii) தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து, அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிறுவுவதற்காகச் சாதனச் சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், நேர்முகப் பரீட்சை வைக்கப்பட்டால், அப்போது இச்சாதனங்களைக் காட்டுதல் வேண்டும். அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது, தாமதமின்றி அவற்றைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவராற் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப்பத்திரம்.

குறிப்பு.—பரீட்சார்த்தி அரசாங்க பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையிற் கல்வி கற்பவராய் அல்லது அண்மையில் விலகியவராயிருந்தால் அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்தே நற்சான்றுப்பத்திரம் பெறுதல்வேண்டும் ; அல்லாவிடின் அதை ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ, நியாயதுரந்தரரிடமிருந்தோ, நொத்தாரிசிடமிருந்தோ, 4,800 ரூபாயோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளமாகப் பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம் ; அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும், விலாசமும் அதில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப்பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்திகளின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப் பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் பொருட்டு) பதிவுக் காரியகர்த்தரால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சாட்சிப் பத்திரம் ;

பிறப்புச்சான்றற்ற பரீட்சார்த்தி ஒருவர் தமது நேர் தகவு வயதுச் சான்றிதழை மட்டுந் தரும்பொழுது அவர் அச்சான்றிதழிற் குறிப்பிடும் பிறப்பாண்டின் யூலை முதலாந் தேதி பிறந்தவராகக் கருதப்படுவர்.

குறிப்பு :

(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப்பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக்கடுதாசியோ ஞானஸ்நான அத்தாட்சிப்பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப்பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்பத்தாட்சிப்பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள் பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் இப்பரீட்சையெடுப்பதற்காக கொடுக்கப்பட்டதுமான பெயரினின்றும் வேறுபட்டால் பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, (அத்தியாயம் 110) பிறப்பு இறப்புச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி (சந்தர்ப்பத்திற்கேற்ப) உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு 18.8.57 இன் 394 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவிடாப்பில் உள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத்தாட்சிப்பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகபூர்வமான மூலக்கடிதம் (ஏற்புடையவிடத்து).

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூல அத்தாட்சிப்பத்திரம், அல்லது அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படாதிருக்குமிடத்து, உத்தியோகபூர்வமான பிறசாதனம் (உ-ம் : இலங்கைப் பொதுக் கல்வித் தராதரப் பத்திரம், சாதாரண தரம் ; தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அறிவிப்புத்துண்டு ; அல்லது பரீட்சார்த்தியின் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக்கடிதம்).

(உ) இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சியச் சேவைகளில் ஒரு சிவில் உத்தியோகத்தரிடமிருந்து சேவையாற்றியதற்கான

சான்றிதழின் மூலப்பிரதி அல்லது போர்ப்படைகளில் சேவையாற்றியதற்கான சான்றிதழ் (5ஏ, 5பீ பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்).

(ஊ) அரசாங்கத்தின் கீழ்ச் சேவையாற்றியதற்கான மூலப்பிரதி (5சி பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்).

(எ) அடையாளச் சீட்டு (நேர்முகப் பரீட்சை நடந்தால்) அப்போது மாத்திரம்.

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். "நேர்முகப் பரீட்சை" நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது அவற்றை அனுப்பிவைக்க தாமதிக்கும் எப்பரீட்சார்த்திகளினதும் பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

**11. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்**

இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி, பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும் போதே, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவுக்கு உட்படப் பொய்யானவை எனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம் பெற்றுச் சேவை செய்யுங்காலத்தில் எப்போதாவது அவர் இப் பரீட்சையெடுப்பதற்குத் தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுதற்கு ஆளாவர். இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகத் தவறுவோரின் பரீட்சை உரிமை நிராகரிக்கப்படும்.

இந்தக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கிணங்கி ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**12. பணந் திருப்பிக் கொடுத்தல்**

எச்சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப் பரீட்சைக்கேனும் மாற்றமுடியாது.

**13. பரீட்சையெடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை**

பரீட்சை அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக, அவர்களுக்கு அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் விடுதலை (கடமை விடுதலையன்று) வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**14. பரீட்சைத் திட்டம்**

இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். அவையாவன: பகுதி I (எழுத்துமூலப் பரீட்சை), பகுதி II (நேர்முகப் பரீட்சை).

பரீட்சைக்குரிய பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் இதன் கீழ் தரப்பட்டுள்ளன. விடைப் பத்திரங்கள் யாவற்றிலும் அவலட்சணமாக எழுதுவதற்கும் எழுத்துக் கூட்டலில் பிழைவிடுவதற்கும் புள்ளிகள் கழிக்கப்படும். விளங்கிக் கொள்ள முடியாத முறையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாகப்படுதற்கு ஆளாவர்.

| பகுதி I—எழுத்துமூலப் பரீட்சை | புள்ளிகள் |
|---|---|
| (1) எண்கணிதம் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—இது ஒன்றரை மணித்தியால வினாப் பத்திரமாகும்; இதில் எண்கணிதம், பலவகையான இருபுறக்கூட்டல், கூட்டல்கள் என்பன உட்பட எண்களையிட்ட சரியான அறிவைச் சோதிக்கும் கேள்விகள் அடங்கும் ... ... | 100 |
| (2) பொது அறிவு (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—30 நிமிட வினாப்பத்திரம் ... | 50 |

இப்பரீட்சைக்கான நேரசூசி பின்வருமாறு :—

மு. ப. 9.00 மு. ப. 10.30 எண்கணிதம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) மு. ப. 10.45—மு. ப. 11.15 பொது அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

பரீட்சை ஆணையாளர் நேரசூசியின் பிரதிகளை வழங்கமாட்டார். ஆகவே பரீட்சார்த்திகள் தமது தேவைக்காக இந்த நேரசூசியைக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**பகுதி II—நேர்முகப் பரீட்சை**

பரீட்சார்த்தி இப்பரீட்சை முழுவதையும் எந்த மொழியில் எடுக்கின்றாரோ அந்த மொழியிலேயே நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

முதற்கண் எழுத்துப் பரீட்சை நடாத்தி, அதன் பெறுபேறுகளைக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குப் போட்டிமுறையிற் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவர்; இந்த நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்; இதற்குரிய தேதி அவர்களுக்கு அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு எத்தனை பேர் அழைக்கப்படல் வேண்டுமென்பதை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி பரீட்சை ஆணையாளரோடும் கலந்தாலோசித்துத் தீர்மானிப்பர். எனினும், ஆளில்லாவிருக்கும் இடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, பரீட்சையில் தேறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாயிருந்தால் நேர்முகப் பரீட்சையை நடாத்தாமலும் விடலாம்.

**15. முடிவுகளைப் பிரசுரித்தலும் நியமனங்கள் கொடுத்தலும்**

சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் ஸ்ரீ லங்கா குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்; ஏற்ற வெற்றிடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

**16. வெற்றிடங்கள்**

இப்பரீட்சையின் முடிவின் பின்னர் நிரப்ப வேண்டிய பதவிகளின் தொகையை, சேவையின் உண்மையான தேவைகளைக் கவனித்து அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி தீர்மானிப்பர்.

**17. வைத்தியப் பரீட்சை**

தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையின் எப்பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடனலமுள்ளவரோவென அறிவதற்காக வைத்திய பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

18. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் தற்றுணிபின்பேரில் கையாளப்படும்.

பீ. மகாதேவா,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சின்
செயலாளரும் பதில் அரசாங்க
நிருவாகப் பணிப்பாளர்
அதிபதியும்.

அரசாங்க நிருவாகத்
திணைக்களம்,
கொழும்பு, 7
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் உ.

**விண்ணப்பப் படிவம்**

பரீட்சைத் திணைக்களம், இலங்கை

**சிறுப்பர் சேவையில் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை மார்ச், 1973**

சுட்டிலக்கம் :

(அலுவலக உபயோகத்திற்காக)

| பால் : |
|---|

1. குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் : ————.

2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் : ————.

3. முழு அஞ்சல் விலாசம் :————.
(அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அரசகரும விலாசங்களைக் கொடுத்தல் வேண்டும்).

4. நீர் பரீட்சையெடுக்க விரும்பும் நிலையம் :—
முதல் தேர்வு : ————.
இரண்டாம் தேர்வு : ————.

5. (அ) நீர்—
(i) பரம்பரையாகவா, அல்லது
(ii) பதிவு வழியாகவா இலங்கைக் குடியென்பதைக் கூறுக.

(ஆ) பிறந்த இடம்—
(i) பரீட்சார்த்தி : ————.
(ii) பரீட்சார்த்தியின் தகப்பன் : ————.

(iii) பரீட்சார்த்தியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.

(iv) பரீட்சார்த்தியின் தகப்பன்வழி முப்பாட்டன் :————.

குறிப்பு.—பரீட்சார்த்தியும் அவர் தகப்பனும் இலங்கையில் பிறந்தவராயின் (i) (ii) ம் நிரப்பப்படல் வேண்டும். பரீட்சார்த்தி அல்லது அவர் தகப்பன் இலங்கைக்கு வெளியே பிறந்தவராயின் (i), (ii), (iii), (iv) நிரப்பப்படல் வேண்டும்.

6. தகவுத் திறன்—

(அ) நீர் இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகவளிக்கும் இவ்வறிவித்தலுள்ள பந்தியையும் உபபந்தியையும் தெளிவாகக் கூறுக : ————.

(ஆ) பிறந்த தேதி : ————.

(இ) கல்வித் தகைமைகள் : ————.

7. நான் மேலே அளித்துள்ள கூற்றுக்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையெனவும் நான் இங்கு ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையும் முன்னர் உபயோகிக்கப்படாதவையுமெனவும் சான்றளிக்கின்றேன்.

(ii) இப்பரீட்சைப் பிரமாணங்களுக்கிணங்கியொழுகச் சம்மதிக்கின்றேன்.

8. முத்திரையின் கூடு. முக்கியமானது—பரீட்சார்த்தி இங்கு 40 ரூபா பெறுமதியான முத்திரைகளையொட்டி தமது கையொப்பத்தையும் தேதியையும் அவற்றின் மேல் எழுதுவதன் மூலம் அவற்றை அழித்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றன்மேல் ஒன்று ஒட்டப்படலாகாது.

| |
|---|
| முத்திரைக் கூடு<br>ரூபா 40 |

————————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

9. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :—
.........................வதிபவரும் வேலைபார்ப்பவரும் நான் நன்கு அறிந்தவருமான.........................*என்பவர் 1973................. ஆந் நாளில் என் முன்னிலையில் தமது கையொப்பமிட்டார் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

(அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்) :————.

பெயர், பதவிப் பெயர், நிலை :————.

விலாசம் :————.

*அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரரின் கையொப்பம் அவரது திணைக்களத் தலைவரால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

பிற விண்ணப்பகாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் அவ்வாறு செய்யப்பட வேண்டும். அஃது. சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், வழக்கறிஞர், நொத்தாரிசு, அரசாங்க அல்லது பணிப்பாளரின் முகாமையிலுள்ள பள்ளிக்கூட முதல்வர், கடற்படை, வான்படை, தரைப்படையிலுள்ள ஆணை பெற்ற உத்தியோகத்தர், ஆண்டுக்கு 4,800 ரூபாவோ அதற்கு மேற்படவோ திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், புத்த கோயிலின் பிரதான பொறுப்பாளர் அல்லது உயர் நாயகம், அல்லது வழிபாட்டுத் தலத்துக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய தானம் வகிக்கும் பிறசமய மதகுரு ஒருவர்.

### பரீட்சைப் பகுதி இலங்கை

பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத் தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணு நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. விஞத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரை தாமதித்துவந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுதாளிலோ விஞத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ் விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு விஞவுக்கு ஒன்றுக்கு

*மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டி விடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந் தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிபாட் டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும் பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவை யெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல் லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட் டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலிய வற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற் றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப் போர் தண்டனைக்குள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வை யாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தி யும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண் டதாகக் கருதப்படுவர்.*

*13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்க ளில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படு வர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*14. பிற பரீட்சார்த்திகளின் விடைத் தாளிலிருந்தோ புத்தகத் திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலி ருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்ச ரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட் சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒரு வருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறு திப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்தி கள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மை யல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

***பரீட்சார்த்திகளுக்கு :***

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிக ளைக் கவனித்தல் வேண்டும் :—*

*(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியா விடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசா ரித்து அறிந்துகொள்ளவேண்டும்.*

*(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்று தற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிட மிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராக ரிக்கப்படக்கூடும்.*

*(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப் பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும்பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத் திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற் றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண் பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

*(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப் படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவை யேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற் பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக் கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றை யும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டு விடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உப யோகித்த பின்னர் அவற்றை உமது மேசை மேல் விட்டுவிட வேண்டும்.*

*(v) சொந்தப் பேனைகள், மை அடிமட்டைகள், கணித உபகர ணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில் கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிர திசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

*(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத் தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன் றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

*(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடிப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக் காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

*(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழி களின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரை படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத் தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறு படியும் கீறப்படவேண்டும்.*

*(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையி லன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

*(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக் குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவ தானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

*(xi) உமது விடைத்தாளை நேரடியாக மேற்பார்வையாளரி டமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல் லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக் கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவ றினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத் துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

*(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.*

*போகொட பிரேமரத்ன,*
*பரீட்சை ஆணையாளர்.*

*பரீட்சைப் பகுதி,*
*மலே வீதி,*
*கொழும்பு 2.*

*1-751—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | 5.1.73 | வெள்ளி | .. | 29.12.72 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 12.1.73 | வெள்ளி | .. | 3.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.1.73 | வெள்ளி | .. | 10.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26.1.73 | வெள்ளி | .. | 17.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | .. | 2.2.73 | வெள்ளி | .. | 24.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.2.73 | வெள்ளி | .. | 31.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 15.2.73 | வியாழன் | .. | 7.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.2.73 | வெள்ளி | .. | 14.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **மாச்சு** | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | .. | 28.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.3.73 | வெள்ளி | .. | 7.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | .. | 14.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **ஏப்பிறில்** | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.